# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைப் பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, யூன் மாதம் 20 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2024 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைப் பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. (கூட்.) 1/2022

## இலங்கைப் பட்டயக் கப்பற்தரகர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

“இலங்கைப் பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம்” என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட அதன் குறிக் கோள்களை பயனுற நிறைவேற்றும் மற்றும் எல்லாக் கருமங்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை

அத்துடன், சொல்லப்பட்ட நிறுவகம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண் ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைப் பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போது இலங்கைப் பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்களான அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் “இலங்கை பட்டயக் கப்பல் தரகர்கள் நிறுவகம்” எனும் பெயர் மகுடத்தின்கீழ் (இதனகத் இலங்கைப் பட்டயக் கப்பல் தரகர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்

துப்பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அத்தகைய சட்டத்துக்கமைய பின்வருமாறாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) கப்பற்றொழிலில் அவர்களிற்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன்மூலம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே கப்பற்றொழிலின் தொழில் வாண்மையை மேம்படுத்தல் ;

(ஆ) கப்பல் தரகு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கிடையே, அத்தகைய துறையில், கப்பற்றொழிலில் முறையான புரிந்துணர்வுகளை உடைய நன்கு கல்விகற்ற பணியாளர்களை வேலைக்கமர்த்துவதன் நன்மைகள் குறித்து விழிப்புணர்வினை உருவாக்குதல்;

(இ) கப்பல் தரகு வியாபாரத்தில் தொழிலுக்கமர்த்தபட்டுள்ளவர்களின் நன்மை குறித்த கருத்தரங்குகள் மற்றும் வேலையமர்வுகளை நடாத்துதல்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு தகுதிப்படுத்தல் பரீட்சைகளுக்கு இயைபான கற்கை நெறிகளை வழங்குதல்;

(உ) இலங்கையின் உள்ளேயும் வெளியேயும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு ஒத்த குறிக்கோள்களை உடைய நிறுவனங்களுடன் புரிந்துணர்வுகளையும் கூட்டுறவுகளையும் மேம்படுத்துதல்;

(ஊ) இயைபான அதிகாரிகளின் சம்மதத்துடன் அத்தகைய அதிகாரிகளுக்கு உதவுதல்:-

(i) கப்பற்றொழிலின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக்கு இணங்க அத்தகைய வியாபாரத்தில் தொழிலினை விரும்பும் ஆட்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல்;

(ii) கப்பற்றொழில் வியாபாரத்தில், அங்கீகரிக்கப் பட்ட கல்வி நிறுவனங்களுடனான கூட்டிணைப்பட்ட கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் அல்லது நடாத்துவதற்கு வழங்குதல்; அத்துடன்

(iii) கப்பற்றொழில் வியாபாரத்தில் கற்கைநெறியை மேற்கொள்ளுதல், மேம்படுத்தல் மற்றும் வசதிப் படுத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அத்தகைய நடைமுறைப்படுத்தலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையின் மீதான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் உள்ளூர் அதிகார சபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத் தாபனத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண் பாடில்லாது இருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் உள்ளூர் அதிகாரசபையின் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக் களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக் கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைத்துவச் சபையொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் நிறுவகத்தின் சபை, பந்தி (ஆ) இன் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாக, 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது சபை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால சபையொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இடைக்காலச் சபை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணின்றி கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்துக்கான விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்கால சபையின் ஏதேனும் முடிபானது அத்தகைய கூட்டத்தில் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

3 (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, சபையின் பதவி தாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டுகள் எனும் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவி தாங்குநர், போஷகர் அல்லது மதியுரைநர் சொல்லப்பட்ட மூன்றாண்டுகள் எனும் காலப்பகுதி கழித்த பின்னர் மீள் நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநர் ஒருவரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந் தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் படட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவம் உட்பட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்று வதற்கும் அல்லது பதவியுயர்விற்கு அல்லது கூட்டிணைப்புக் குழுவின் நோக்கத்தின் முன்னேற்றத்திற்கு அல்லது இவற்றுள் ஏதேனுமொன்றிற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்டக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் வாடகைக்கு எடுக்கவும், நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறு அவற்றைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில்

நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவாயினுஞ்சரி அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி செய்துகொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அடைவதற்காக பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப்பொறுப்புக்களின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுவதற்கும்:

ஆயின், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடுவதற்கும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும் நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் படி கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்து தலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பாண்மை மற்றும் உறுப்பாண்மைக்கான அனுமதி தொடர்பிலான கட்டணங்கள், ஒப்பப்பணங்கள் மற்றும் உதவுதொகை களை தீர்மானித்தலும் அறவிடுதலும்;

(ஐ) இயைபான அதிகாரசபையின் சம்மதத்துக்கிணங்க கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அல்லது அதன் சார்பாக நடாத்தப்படும் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகளிற்கான அனுமதி தொடர்பான கட்டணங்களை தீர்மானித்தலும் அறவிடுதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் பின் பற்றப்படவேண்டிய ஒழுக்கவிதிகளை தொகுத்தலும் அத்தகைய உறுப்பினர்களது பின்பற்றலை பாதுகாத்த லும்;

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம் படுத்தும் நோக்குடன் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் கப்பற்றொழில் வியாபாரம் தொடர்பில் மாநாடுகள், கருத்தரங்குகள், மன்றங்கள், வேலையமர்வுகள் மற்றும் கூட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல்;

(ஔ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் நல்லுறவுகளை தாபித்த லும், மேம்படுத்துதலும், வளர்த்தலும், பேணுதலும்;

(க) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் பயிற்சியளிதலும்;

(ங) பல்வேறு தரத்திலான உறுப்பாண்மைக்கான அனுமதிக்காக வேட்பாளர்களின் தகுதியை மதிப்பிடுதல் ; அத்துடன்

(ச) பொதுவாக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்காக, இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்*

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும்:–

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும் உறுப்பினர்களின் இடாப்பொன்றை பேணுதலும்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் வேறு சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும், சபையினதும் அல்லது ஏதேனும் உபகுழுக்களினதும் கூட்டங்களைக் கூட்டுவதற்காகவும் அதனை நடாத்துவதற்காகவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) சபையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்; அத்துடன்

(ஊ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப்போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படக்கூடிய அத்தகைய ஏதேனும் விதி பற்றிய தேதி பற்றிய அறிவிப்பானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தொராதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

**8**. சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப் படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்*

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 6 இன் பந்தி (இ) வின் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்*

**10**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்டு அத்தகைய தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘தகைமைபெற்ற கணக்காய்வாளர்’’ என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து தகைமையான கணக்காய்வாளரொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டு கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு

சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்குக்கூற்றொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப் படுதல் வேண்டும்.

நிறுவகத்திற்கு வருமதியானதும் நிறுவகத்திற்கு செலுத்தப் படற்பாலனவுமான தனிசுகள்

**12**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் நிறுவகத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக் களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத் தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்க லாம்

**13**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது வேறு வகையில் எவ்வாறிருப்பினும் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான, சபையின் பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்புடைமையை மட்டுப்படுத்தல்

**16.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் செலுத்தித் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரொருவர் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அத்தகைய ஆளொருவரிடமிருந்து வருமதியாகவிருக்குமானறான அத்தகைய ஒப்பணத் தொகையினை விஞ்சிய ஏதேனும் உதவித்தொகையினை செய்வதற்கு ஆளாதலாகாது.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**17.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் தோதான நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பின் பதிலாளர் என்போரின் அங்கீகாரத்துடன், பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் கலைப்புக்கு நேர்முன்னர், தோதான நிறுவனமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**18**. இச்சட்டம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–

"வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமளிக் கப்பட்ட வங்கியொன்று எனப் பொருள்படும்;

"கப்பல்தரகு வியாபாரம்" என்பது, கப்பற்றொழிற் துறையில் கம்பனிகளினாலும் தனியாட்களினாலும் கொண்டு நடாத்தப்படும் ஒரு தொழிலாண்மைசார் சேவை எனப் பொருள்படும்;

"கப்பற்றொழில்" என்பது, கப்பல் விற்றல் மற்றும் கொள்வனவு செய்தல், கப்பல் முகாமைத்துவம், காய்ந்த கப்பற் குப்பை பட்டயப்படுத்தல், தாங்கி பட்டயப்படுத்தல், துறைமுக முகவராண்மை, வரிசை விற்பனைகள், மூலோபாய மற்றும் பன்முக போக்குவரத்து, துறைமுக மற்றும் முனைய முகாமைத்துவம், கப்பல் நிதி, கப்பல் சட்டம், காப்புறுதி, தாழி அமைத்தல் மற்றும் கப்பல் வகுதி என்பனவற்றை உள்ளடக்குகின்றது;

"சட்டம்" என்பது, அரசிலயலமைப்பிலுள்ள அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படுவதுடன், அத்தகைய ஏதேனும் சபையின் தத்துவங்கள், கடமைகள்

மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதலுக்கு நேரொத்த அல்லது ஒத்த தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் அல்லது செயல்படுத்தலுக்காக ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக்கொடை, கடன் அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினாலோ அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது ஏனைய குழு எனப் பொருள்படும்; அத்துடன்

"எழுத்திலான சட்டம்" என்பது, மாகாணசபையினால் ஆக்கப்பட்ட நியதிச் சட்டங்கள் மற்றும் அத்தகைய நியதிச் சட்டங்கள், கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணைச் சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அல்லது வழங்குவதற்கு தத்துவம் அல்லது அதிகாரத்தைக் கொண்டுள்ள ஏதேனும் குழுவினால் அல்லது ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்ற ஏதேனும் சட்டம் மற்றும் துணைநிலைச் சட்டம் எனப் பொருள்படும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணல்*

**19**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**20**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*